

# VOICE OF VAILANKANNI



VOICE : 14 ECHO : 2




Of all created things, the loveliest
And most divine, are children.

— William Canton.

SHRINE VAILANKANNI SENIOR SECONDARY SCHOOL

# EDITORIAL

As we step into the last decade of twentieth century, we start the new year with new resolutions, new hopes and new horizons before us. We Invoke the blessings of our presiding deity Vailankanni Matha to materialise all our wishes and to bless the Vailankanni family and the Vailankanni group of schools with all prosperity, progress and splendour.

We are proud to announce that our grand cultural fiesta - Vailankanni Kala Utsav 1990 held in connection with Our Founder's day Celebrations is to become an annual feature.

The present issue highlights the problems of the girl-child, prevalent especially in the South Asian Saarc Countries. The girl child is discriminated against and India is no exception – the causes being economical, social and religious. We sincerely hope the spread of education to exorcise superstitious ignorance and religious orthodoxy, that bind woman in general and restrict the development of the girl-child in the decade of the Girl Child - 1991-2000.

The section - 'Race to save the planet, emphasises the acute need of a sensitive awareness among us to retrieve the ecological imbalance of the earth.

— EDITORS

---

# Editorial Board

**GENERAL EDITORS :**

Mr. RANJEEV RAGHAVAN, Vice Principal
Mrs. VEDHAKUMAR CHANDRAN, Vice Principal

**STAFF EDITORS :**

| | | |
|---|---|---|
| ENGLISH | — | Mrs. ARUNSELVI RATHNASABAPATHY |
| TAMIL | — | Mr. P. K. PRABHAKARAN |
| TELUGU | — | Miss. P. VATSALAKUMARI |
| HINDI | — | Mr. MUSTAFA ALI |

**STUDENT EDITORS :**

G. MANIGANDAN, XI A — T.N.C. VENKATARANGAN, XI A
A. GIRIDHARAN, XI C — L R. RAJESH, XI A

# பெண் குழந்தைகள் சுவையா? சுமையா?

## கருத்துக்கோவை

**முன்னுரை :**

''பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!''

என்று பாரதியார் ஆண் பெண் சமத்துவத்தை வலியுறுத்துகிறார். ஆனால் இன்று வரை பெண்களின் நிலை இன்னும் உயர்ந்தபாடில்லை.

இந்நிலையில் தான், இந்த வருடம் 'சார்க் நாடுகளின் பெண் குழந்தைகள் ஆண்டாக' அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய கொடுமைகளை வருத்தத்துடன் தாங்கும் பெண்குழந்தைகளின் நிலை கண்டு வருந்தினோம். பெண்களின் கொடுமை களைப் போக்க வழி வகைகளையும், அரசு பெண்களுக்கென அளித்த சில சலுகை களைப் பற்றியும், மக்கள் சமுதாயத்திற்காகப் பாடுபடும் நல்லோர்களின் கருத்தை யறிய முற்பட்டோம். அவர்களும் தயங்காமல் எங்களைத் தட்டிக்கொடுத்துத் தங்கள் கருத்துக்களைக் கூறினர். அக்கருத்துத்தொகுப்பினை உங்கள் முன் படைக் கின்றோம்.

**பேட்டி தந்தோர் :**

1. பள்ளிச் செயலாளர்
2. முதல்வர், துணைமுதல்வர், ஆசிரியர்கள்
3. கவிஞர் பொன்னடியான்
4. கவிஞர் அமுதபாரதி
5. தாமரைத் திரு ஜெயா அருணாசலம்
6. எழுத்தாளர் அனுராதா ரமணன்

**பேட்டி எடுத்தோர் :**

தி. ந. ச. வெங்கடரங்கன்
கோ. மணிகண்டன்
லா. ரா. இராஜேஷ்
} XI - A

**ஊக்குவித்தவர் :**

திரு. பெ. கி. பிரபாகரன்,
(தமிழ்த்துறை)

# பள்ளிச் செயலாளருடன் ஒரு நேர்முகப் பேட்டி :

கேள்வி : சார்க்நாடுகள் மட்டும் இவ்வாண்டைப் ''பெண்குழந்தைகள் ஆண்டு'' என அறிவிக்கக் காரணம்?



பதில் : ''எல்லா நாடுகளிலும் பெண்கள் பிரச்சனைகள் நிறைய உள்ளன. நம்ம நாட்டுல பெண்களை ரொம்ப suppress பண்ணிட்டோம். இந்தியாவைப் பொறுத்த மட்டும், பெண் கொடுமைகள் நிறைய இன்னும் நிலவுகின்றன. இப்பக் கூட, பல கிராமங்களிலே, பெண் குழந்தைகளைக் கருவிலேயே அழிச்சுடறாங்க. நம்ம நாட்டுல இன்னும் பெண் குழந்தைங்க நிறைய படிக்க வேண்டாம் என்ற நினைப்பு மக்களிடையே இருக்கு. இது அவங்க மனதிலிருந்து அகற்றப்படணும்.''

கேள்வி : பெண் விடுதலை பற்றித் தங்கள் கருத்து என்ன?

பதில் : ''பெண்ணுக்கு விடுதலை மிகவும் அவசியம்; ஆனா பெண் ஒரு கோட்டுக்குள்ள சுதந்திரமா வாழணும்; அந்தக் கோட்டுக்குள்ளேதான் அவளுக்கு விடுதலையைக் கொடுக்கணும், தன்னால சுதந்திரமா, நாட்டுக்கு என்ன சேவை செய்ய முடியுங்கறதை யோசித்துப் பார்க்கணும். பெண் விடுதலை, அதாவது "liberation with limitation" மிகவும் அவசியம். ஒரு பெண், பெண்ணாக இருந்து விடுதலை பெற முயல வேண்டும்.''

கேள்வி : வேலையில் பெண்களுக்கு முப்பது சதவிகித ஒதுக்கீடு போல், கல்வியிலும் கொடுக்கலாமா?

பதில் : கல்வியில் ஒதுக்கீடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. பெண்களுக்கு, எல்லாத்துறைகளிலும் நிறைய வாய்ப்பு இருக்கின்றன. பெண்களுக்குச் சம உரிமை தான் தேவை; இட ஒதுக்கீடு அவசியமில்லை.''

கேள்வி : ''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்'' என்றார் பாரதியார். அவருடைய இவ்வறிவுரையை இக்கால இளம் பெண்கள் பின் பற்றுகின்றனரா?

பதில் : ''இக்கால இளம் பெண்கள் மேடையிலும் சரி, வீட்டின் வெளியிலும் சரி "Idealism" பற்றிப் பேசறாங்க; ஆனா அவங்க வாழ்க்கையிலே அப்படி நடக்கறதில்லை. பாரதியார் சொன்னதை அவங்க இப்ப கூடப் பின்பற்றுவதில்லை.''

கேள்வி : ஐந்தாம் வகுப்பு வரை, பள்ளிகளில் பெண்களே ஆசிரியர்களாக இருக்க வேண்டும் என்ற தமிழக அரசின் அறிவிப்பைப் பற்றி.....?

பதில் : ''தமிழக அரசு இவ்வாறு அறிவித்தது சரியானதே. பெண்கள் பொறுமை உள்ளவர்கள், தாய்மை உணர்ச்சியுடன் குழந்தைகளை நடத்திச் செல்லும் திறன் உடையவர்கள். ஆகவே, அவர்களால் குழந்தைகளைப் புரிந்து கொண்டு, நல்ல வழியில் கற்பிக்க இயலும். ஆகவே, இவ்வாறு அரசு அறிவித்தது வரவேற்கத் தக்கதே!''

கேள்வி : ''ஒரு அழகான பெண், என்றைக்கு மிகுந்த நகைகளுடன் நள்ளிரவில் தனியாக வெளியில் சென்று பாதுகாப்பாக வீடு திரும்புகிறாளோ, அன்றுதான் முழுச் சுதந்திரம் பாரதத்திற்குக் கிடைத்ததாகும்'' என்று கூறினார் மகாத்மா காந்தி. இந்தச் சுதந்திரம் நமக்குக் கிடைத்து விட்டதா?

பதில் : ''கண்டிப்பாக இச்சுதந்திரம் நமக்குக் கிடைத்துவிட்டது; குறிப்பாக தமிழ் நாட்டுப் பெண்களுக்கு நிச்சயமாக, காந்தி சொன்ன சுதந்திரம் கிடைத்து விட்டது. என்னைப் போன்ற பல பெண்களால், நடு இரவில், நகைகளுடன் பாதுகாப்பாகச் சென்று வர முடிகிறது.''

கேள்வி : பெண்களின் கல்வித்தரத்தை உயர்த்த என்ன செய்யலாம்?

பதில் : ''கட்டாய இலவசக் கல்வி பெண்களுக்குக் கொடுக்கலாம். கொடுப்பதோடு அரசும் இதைச் செயல்படுத்த முணைப்பாக ஈடுபட வேண்டும்.''

கேள்வி : பெண்ணின் தோல்விக்கு ஆணே காரணம் என்று நாம் கூறலாமா?

பதில் : ''அப்படி நாம் சொல்லமுடியாது. நம் வெற்றிக்கு வேண்டுமானால் பத்து பேர்களைக் காரணம் சொல்லலாம். நம் தோல்விகளுக்கு நாமே காரணம்; இதை விட்டுவிட்டு மற்றவர்களைக் காரணம் சொல்வது தவறு.''

கேள்வி : பொதுவாகத் தொழில் நுட்பக் கல்விகளைப் பெண்கள் படித்துவிட்டு அதில் ஈடுபடாமல் இருக்கும் நிலையைப் பற்றி?

பதில் : இன்றுள்ள சூழ்நிலையில் பட்டப்படிப்பு முடித்த பெண்களில் பலர் தன் கல்வியைப் பயன்படுத்தாமல், அதை வீணடிக்கிறார்கள். ''Graduation without utilisation'' என்பது என்னைப் பொறுத்தவரை உபயோகம் இல்லாதது''

கேள்வி : சங்க காலத்தில் உயர்ந்து இருந்த பெண்கள், சமுதாயத்தில் நாளடைவில் பின் தங்கிவிட்டதன் காரணம் என்ன?

பதில் : ''இதிகாசப் புராணங்களைத் தவறாகப் புரிந்து கொண்டதே இதற்குக் காரணம். அந்தக் காலத்தில் அரிசி மாவில் கோலம் போட்டனர் என்றால் அது, ஈ, எறும்புகளுக்கு உணவாகப் பயன்பட்டது, ஆனால் நாம் இன்று சுண்ணாம்பில் கோலம் போடுகிறோம். அந்தத் தத்துவத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதே இதற்குக் காரணம். இதே போல் உடன்கட்டை ஏறும் வழக்கமும், நம் மரபுகளைத் தவறாகப் புரிந்து கொண்டதின் விளைவுதான்.

# ஆசிரியர்களின் சமுதாயக் கண்ணோட்டம்

கேள்வி : இந்த ஆண்டினை சார்க் நாடுகள் ''பெண் குழந்தைகள் ஆண்டு'' என அறிவிக்கக் காரணம் என்ன?

பதில் : ஆங்கில ஆசிரியை, சாந்திஸ்ரீ :

எல்லா இடங்களிலும் பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது, ஆண்கள் பெண்களை நடத்தும் விதம், நாட்டிற்கு நாடு மாறுபடுவதால் பெண்களின் பிரச்சனைகள் பல்வேறு கோணங்களில் பார்க்கப்படுகிறது.

அறிவியல் ஆசிரியர் சண்முகம் :

சார்க் நாடுகள், பழைய கலாச்சாரத்தைப் பின்பற்றும் 'மரபு வழி நாடுகள்' ஆகவே மேலை நாடுகளை விடப் பெண்கள் சார்க் நாடுகளில் பொருளாதாரத்தில் பின் தங்கி இருக்கிறார்கள்.

தமிழ் ஆசிரியர் இராசவேலு :

மேலை நாடுகள் கூடப் பெண்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக, இவ்வாறு அறிவிக்க அக்கறை கொண்டிருக்கலாம். ஆனால், இவ்விஷயத்தில் சார்க் நாடுகள் முந்திக் கொண்டு விட்டன எனலாம்.

கேள்வி : பெண் குழந்தைகள் ஆண்டு, என ஏன் குறிப்பாக அறிவிக்க வேண்டும்?

திருமதி சீதா ரஞ்சித் அவர்களின் கருத்து :

ஒரு பெண், வளரும் பருவத்திலிருந்தே அவதிக்குள்ளாகிறாள். வளரும் பருவத்திலேயே அவளுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுத்தால், அவள் மனத்திண்மையும், மன வளர்ச்சியும் அடைவாள், அது அவளுடைய வளர்ச்சிக்கு வழிகோலும். ஆகவே, இவ்வாண்டைப் ''பெண் குழந்தைகள் ஆண்டு'' என அறிவித்திருக்கிறார்கள்.

கேள்வி : காந்தியடிகள் சுதந்திரத்திற்கு முன் கூறினார். எப்பொழுது ஒரு பெண் நள்ளிரவில் தன்னந்தனியே வெளியே சென்று ஆபத்து இல்லாமல் வீடு திரும்புகிறாளோ, அன்றுதான் நாட்டிற்கு உண்மையான சுதந்திரம் கிடைத்ததாகும், இந்தச் சுதந்திரத்தை நம் நாடு பெற்று விட்டதா?

பதில் : துணை முதல்வர், இரஞ்சீவ் இராகவன் :

மகாத்மா காந்தி அவர்கள் குறிப்பிட்ட சுதந்திரம், பெண்களுக்கு இன்னும் முழு அளவில் கிடைக்கவில்லை, ஏனென்றால், இன்னும் ஒரு பெண் தனியாக நடு இரவில் செல்வது மிகவும் ஆபத்தான ஒன்றாகும். இது போன்ற ஒன்றை நாம் கனவில் கூட நடக்கும் என்று எண்ணிவிட முடியாது.

கேள்வி : பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை ஆசிரியர்கள் பெண்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற தமிழக அரசின் கருத்தினைப் பற்றி?

பதில் : பள்ளி முதல்வர் :

சிறுவர்களைப் புரிந்து கொண்டு ஊக்குவிக்கும் திறன் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டும். சிறுவர்கள் ஆசிரியர்களிடம் இருந்து தாய்ப்பாசத்தையும், பிணைப்பையும் எதிர் பார்க்கிறார்கள். ஒரு ஆசிரியையால் மாணவனை, ஆசிரியரை விட நன்கு புரிந்து கொள்ள முடியும். ஒரு சிறுவன் பள்ளிக்குச் செல்லும் போது தன் வீட்டிற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழலில் அடி எடுத்து வைக்கின்றான். ஆகவே, தமிழக அரசு இவ்வாறு அறிவித்தது வரவேற்கத் தக்கது.

திருமதி தாரா இராஜசேகரன் :

இவ்வாறு அறிவித்தது வரவேற்கத்தக்கது. ஐந்தாம் வகுப்பு வரை பெண்கள் ஆசிரியராக இருந்தால், பொறுமையுடனும், தாய்ப்பாசத்துடனும் நடத்த முடியும். ஏனென்றால், அவர்களுக்குத் தான் மாணவர்களின் மனநிலை நன்றாகத் தெரியும்.

கேள்வி : தொழில் துறைகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தது போல், கல்வியிலும் கொடுக்கலாமா ?

பதில் : பள்ளி முதல்வர் :

நம் நாட்டில் பின் தங்கிய வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு கொடுக்கும் போதே பெண்களுக்கான இட ஒதுக்கீடும் அதிலேயே அடங்கி விடுகிறது, ஏனென்றால் பெண்கள் எல்லா இடங்களிலும் இழிவுபடுத்தப் படுகிறார்கள். இந்தக் கொடுமையை பின்தங்கிய வகுப்பிலுள்ள பெண்களே நிறைய அனுபவிக்கிறார்கள். ஆகவே, பெண்களுக்கு என்று பள்ளிகளில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டியது அவசியமில்லை.

திரு. ஜோசப் :

பள்ளியில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கலாம், அது அவர்களது பொருளாதாரத்தை ஒத்திருக்க வேண்டும். பள்ளித் தேர்வில் தேறவில்லை என்றால் உபரி மதிப்பெண் அளித்தல் போன்றவை நடை பெறக் கூடாது.

கேள்வி : பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுப்பதனால் ஆண்கள் முன்னேறும் வாய்ப்புகள் குறைந்து விட்டனவா?

பதில் : திருமதி தாரா இராஜசேகர் :

இவ்வாறு பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுப்பதனால் ஆண்களுக்கான முன்னேறும் வாய்ப்புகள் குறையத்தான் செய்கின்றன. மேலும் ஒரு ஆண் குடும்ப பாரத்தைத் தாங்கிச் செல்பவனாகவும் இருக்கலாம். தன் குடும்பத்திற்கு வேண்டிய வருமானத்தை ஈட்டுபவனாகவும் இருக்கலாம். ஆகவே இவ்வாறு பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கும் பொழுது ஆண்களின் வாய்ப்புகளைப் பாதிக்கின்றது.

கேள்வி : வரதட்சிணைக் கொடுமைக்கு எம்முறையில் தீர்வு காணலாம்?

பதில் : திருமதி சாந்திஸ்ரீ ;

ஆண்கள் மாமியாரின் வேடத்தில் உள்ள பெண்களால் தூண்டப்பட்டு வர தட்சிணைக் கேட்கிறார்கள், இதற்கும் ஆண்கள் பெண்களையே காரணம் காட்டு கிறார்கள், இதற்குக் காரணம் ஆண்களே! தீர்வும் அவர்கள் கையிலேயே உள்ளது.

பள்ளித் துணை முதல்வர் :

வரதட்சிணை வாங்கும் பழக்கம், இந்தியப் பாரம்பரியத்தில் பரம்பரை பரம்பரையாகத் தொடர்வதாகும். வரதட்சிணையை ஒரு பெண்ணாலோ, ஆணாலோ, தனியாகத் தடுக்க முடியாது. இதைக் கூட்டு முயற்சியால்தான் தடுக்க முடியும்.

விமலா, அறிவியல்துறை :

இதற்குத் தீர்வு, ஆண்கள் கையில் உள்ளது, பெண்களுடைய உதவியுடன் அவர்களால் இதை தடுக்க முடியும். உதாரணமாக, பெண்கள் வரதட்சிணை கொடுக்க முடியாது என்று கூறினால், ஆண்களும் அதற்கு உடன்பாடாக வரதட்சிணை பெற மாட்டோம் என்று கூற வேண்டும். இதுவே இப்பிரச்சனைக்குத் தீர்வாகும்.

பள்ளி முதல்வர் ;

இதற்குக் காரணம், தாய் தந்தையர்கள்தான். ஏனெனில் இப்பொழுது ஒரு பெண் வரதட்சிணைக் கொடுக்க இணங்காவிட்டாலும், தாய் தந்தையர், அவளை வரதட்சிணைக் கொடுத்துத் திருமணம் செய்து வைக்க இசைகிறார்கள். இதற்குத் தீர்வு தாய் தந்தையர் கையில் உள்ளது.

திருமதி தாரா இராஜசேகர் :

வரதட்சிணைக் கொடுமையால் பெண்கள் தான் அதிகமாக பாதிக்கப்பட்டு உள்ளார்கள். அவர்கள் எல்லா வகையான கொடுமைகளையும் அனுபவித்துள்ளார்கள். ஆண்கள் எவ்வளவு வயதானாலும் கல்யாணம் செய்து கொள்ளலாம். ஆனால் பெண்களால் அவ்வாறு செய்ய முடியாது. ஆகவே, தீர்வு ஆண்கள் கையில் தான் உள்ளது.

கேள்வி : நடக்கவிருக்கும் மாநகராட்சித் தேர்தலில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு தர நினைப்பது சரியா?

பதில் : திரு. ஜோசப் :

ஓட்டுப் போடும் மக்களை, வற்புறுத்தும் வகையில் உள்ளது. பெண்கள் தேர்தலில் நின்று ஆண்களை எதிர்த்து வெற்றி பெறுவதே வரவேற்கத் தக்கது.

திரு. இராசவேலு :

இந்த விஷயத்தில், அரசை விட அரசியல் கட்சிகளே, ஒதுக்கீடு முறைகளை மேற் கொள்ளலாம்.

கேள்வி : மாறுபட்டு வரும் இன்றைய சமுதாயத்தில் பெண்கள் தலைமையில் வேலை செய்வது பற்றி?

பதில் : திருமதி. ஸோஸம்மா தோமஸ் :

பெண்கள், திறமையுள்ளவர்களாக இருந்தால், அவர்கள் தலைமையில் வேலை செய்வதில் தவறொன்றுமில்லை.

திரு. ஜோசப் :

தகுதி, திறமை, பொறுமையிருந்தால் பெண்கள் தலைமையேற்கலாம். அவர்கள், எல்லாவற்றிலும் முழுமையையும், ஒழுங்கையும் எதிர்பார்ப்பவர்கள்.

கேள்வி : சமீப காலமாக, மதுரையைச் சுற்றியுள்ள கிராமங்களில், பெண் குழந்தைகள் கொலை செய்யப்படுவதைப் பற்றி?

பதில் : திருமதி. பார்வதி, நூலகத்துறை :

இது பெண்களே, பெண்களுக்குச் செய்யும் மிகப் பெரிய அநீதி. சமூகக் கொடுமைகளிலிருந்து அவர்களாவது விடுதலை பெறட்டுமே என்பதை எண்ணி, கல்வி அறிவில்லாத கிராம மக்கள் இவ்வாறு செய்துள்ளார்கள், "Mercy Killing" என்பதைப்போல...

திருமதி விமலா :

இது பெண்களே செய்யும் தவறாகும். இதைத் தடுக்க வேண்டும்.

திருமதி சீதா ரஞ்சித் ;

கல்வியறிவில்லாமையே இதற்குக் காரணம். கல்வியறிவு பெற்ற, குடும்பங்களில் இவ்வாறு நடைபெறாது.

கேள்வி : இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இது வரை ஒரு பெண் ஜனாதிபதியாக வரமுடியவில்லையே?

பதில் : திருமதி. சாந்தி ஸ்ரீ :

அரசியல் சட்டத்தின் படி, ஜனாதிபதியை விட பிரதமருக்கு அதிக பொறுப்பும், அதிகாரங்களும் உண்டு. நம் நாட்டில் பெண்கள் ஜனாதிபதியாகவில்லை என்றாலும் இந்திராகாந்தி அவர்கள், பன்னிரெண்டு ஆண்டுகள் பிரதமராக இருந்துள்ளார். அவர் ஆட்சிக் காலத்தில், பெண்களுக்காக, எனக்குத் தெரிந்த வரை, ஒரு மசோதா கூடக் கொண்டு வரவில்லை. ஆகையால் பெண்களின் நிலையில், பெண் ஜனாதிபதியாகிவிடுவதால், மாற்றம் ஏதும் ஏற்படப்போவதில்லை. இருப்பினும், பெண்களுக்கு ஜனாதிபதியாகத் தகுதியில்லை எனக் கூற முடியாது.

திருமதி. ஸோஸம்மாதோமஸ் :

பெண்களின் தகுதி படிப்படியாக இப்பொழுது தான் உயர்ந்து வருகிறது. ஆகவே, ஒரு பெண் ஜனாதிபதியாகும் காலம், வெகு தொலைவிலில்லை.

கேள்வி : மற்ற சார்க் நாடுகளை விடப் பாகிஸ்தானில், படித்த பெண்களின் சதவிகிதம் அதிகமாக உள்ளது பற்றி?

திரு. இரஞ்சீவ் இராகவன் :

மதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடுகளில் அதுவும் ஒன்று. மதத்தின் வழிமுறைகளைக் கற்பதற்காக, அவர்களின் வீடுகளிலேயே ஆசிரியர்கள் மூலம் கற்கிறார்கள். இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

திருமதி. தாரா இராஜசேகர் :

பாகிஸ்தானை இதற்காகப் பாராட்டலாம். மற்ற சார்க் நாடுகள் உயர் நிலைக் கல்வியாவது எல்லோருக்கும் போதிக்க முன் வரவேண்டும்.

கேள்வி : சங்க காலப் பெண்களுக்கும், இக்காலப் பெண்களுக்கும் உள்ள வித்தியாசம் யாது?

பதில் : திரு. இராசவேலு :

நம் நாடு இவ் விஷயத்தில் பின் தங்கி உள்ளது. நெடுஞ்செழியன் ஆட்சியில் கண்ணகிக்கு உரிமை கிடைத்தது. இப்பொழுது சட்டம் ஒழுங்கு கெட்டுள்ளதால், பெண்களின் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது.

# பெண்கள் நிலைகுறித்து கவிஞர் பொன்னடியான் அவர்களுடன் ஓர் கலந்துரையாடல்

கேள்வி : அக்காலப் பெண்ணிற்கும் இக்காலப் பெண்ணிற்கும் உள்ள வேறுபாடு யாது?

பதில் : பெண்மை என்பதும் ஆண்மை என்பதும் சமூகத்தின் இரு அங்கங்களாகும். பெண்கள் பழங்காலத்தில் பெரிதும் மதிக்கப்பட்டனர். அறியாமை, கல்வியின்மை ஆகியவைதான் பெண் கொடுமைக்கு முக்கியக் காரணங்களாகின்றன. இக்காலத்தில் இது போன்ற கொடுமைகள் இப்பொழுது பலரின் முயற்சியால் அகற்றப்பட்டு வருகின்றன. ஆகவே இக்காலப் பெண்ணைப் போல் அக்காலப் பெண்ணிற்கு வெளியே சுதந்திரத்துடன் செல்வதைத் தவிர, பொதுவாக வேறுபாடு ஏதுமில்லை.

கேள்வி : மாநகராட்சித் தேர்தலில் பெண் வேட்பாளர்களுக்கு எனச் சில தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்பது சரியா?

பதில் : சாதியின் பெயரில் ஒதுக்கீடு செய்வது போன்று, இதுவும் ஜனநாயகத்தைப் பாதிக்கும் செயலாகும். இப்படி ஒதுக்கீடு கொடுத்தால், பின்பு கண்ணில்லாதவர் தொகுதி, வேலை இல்லாதவர் தொகுதி, காலில்லாதவர்கள் தொகுதி என ஒதுக்க வேண்டி வரும். இவை அர்த்தமற்ற செயல்களாகும். பெண்களுக்கு இவ்வாய்ப்பு அரசியல் கட்சி அளவிலே அளிப்பது வரவேற்கத் தக்கது,

கேள்வி : தொழில் துறையில் பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பது போல் பள்ளி, கல்லூரிகளிலும் இட ஒதுக்கீடு கொடுக்கலாமா?

பதில் : இவ்வாறு கல்வித் துறைகளில் இட ஒதுக்கீடு அளிப்பது என்பது தேவையற்ற ஒன்றாகும். தங்கள் திறமையால் பெண்கள் முன்னேறுவது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

கேள்வி : ஐந்தாம் வகுப்பு வரை பெண்களையே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்ற அரசின் கருத்து பற்றி?

பதில் : இது மிகவும் நல்ல கருத்தாகும், இயற்கைக் கூறுகளிலேயே பெண்மை என்பது மென்மையான தாயன்பு கொண்டதாகப் படைக்கப்பட்டதாகும். நாம் எந்த இனத்தில் பார்த்தாலும், குழந்தைமேல் தந்தையைவிடத் தாய்ப் பாசம் தலையோங்கி நிற்கும்: அது பூனையாக இருந்தாலும் சரி; பசுவாக இருந்தாலும் சரி; பறவையாக இருந்தாலும் சரி, இவை யாவையும் தாய்மைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. ஒரு ஆணை விட, ஒரு பெண்ணிடத்தில்தான் பாசம், பரிவு, அன்பு போன்ற எண்ணங்கள் மேலோங்கி நிற்பதால், அவளாலேதான் ஆணை விட ஒரு குழந்தைக்கு அரவணைப்புடன் கற்பிக்க முடியும்.

கேள்வி : பல்வேறு துறைகளில், பெண்களுக்கு ஒதுக்கீடு கொடுப்பதால் ஆண்களுக்கான வாய்ப்புகள் குறைந்து விட்டனவா?

பதில் : பெண்களுக்கு ஒதுக்கீடு அளிப்பதால், ஆண்களுக்கான வாய்ப்புகள் குறையவில்லை. திறமையான ஆணும், திறமையான பெண்ணும், ஒதுக்கீடு இல்லாமலேயே வேலையைப் பெறுவார்கள் என நான் நம்புகிறேன். மேலும் பெண்களின் மென்மையான உடல் கூறுக்கேற்ப எந்தத் துறைகளில் ஒதுக்கீடு அளிக்க முடியுமோ, அத் துறைகளில் ஒதுக்கீடு அளிப்பது வரவேற்கத் தக்கது.

கேள்வி : மதுரை மாவட்டத்தை அடுத்துள்ள கிராமங்களில் பெண் குழந்தைகள் பிறந்தவுடன் கொல்லப்படுவதைப் பற்றி?

பதில் : இக் கொடுமை பல காலமாக நம் நாட்டில் நடைபெற்று வருகிறது. இக் கொடுமையைத் தடுக்க தக்க தண்டனை அளிப்பது நல்லது. இக் கொடுமையை அகற்ற அதிகபட்ச தண்டனையான தூக்குத் தண்டனையைத் தருவது நல்லது. கல்வியறிவுயில்லாமை, அறியாமை ஆகியவற்றின் காரணமாகத்தான் இவ்வாறான கொடுமைகள் நடைபெறுகின்றன. சட்ட ரீதியில் இதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கேள்வி : பெண்களில் ஔவையாருக்குப் பின் பெண் கவிஞர்கள் உருவாகாதது பற்றி?

பதில் : பொதுவாகக் கவிதை எழுதும் ஆற்றலைப் பெற்ற பெண்கள் திருமணம் ஆனவுடன் முன்பு போல் கவிதை எழுத முன் வருவதில்லை, ஏனெனில் அவர்கள் திருமணமான பின் முன் போல் ஊக்குவிக்கப்படுவதில்லை. அக்காலத்தில், மன்னராட்சியில் பெண்களுக்கு நல்ல ஊக்குவிப்புக் கிடைத்தது. இக்காலத்திலும் அரசு அப்படி அளித்தால் மேலும் நல்ல பெண் கவிஞர்கள் தோன்றுவார்கள்.

கேள்வி : என்றைக்கு ஒரு பெண் நகையணிந்து, நள்ளிரவில் தன்னந்தனியே வெளியே சென்று, வீடு திரும்புகிறாளோ, அன்றைக்குத்தான் நம் நாடு பூரண சுதந்திரம் அடைந்ததாகும் என்று காந்தியடிகள் கூறினார். இச்சுதந்திரம், இந்தியாவிற்கு இப்பொழுது கிடைத்துள்ளதா?

பதில் : ''இவ்விஷயத்தில் நம் நாடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக் கிறது. கல்வியறிவில்லாமைதான் இது போன்ற தீமைக்குக் காரணம். ஆனாலும், இந்தியா தவிர கல்வியறிவு உள்ள அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளிலும், இக் கொடுமை நிலவித்தான் வருகிறது. நல்ல சமுதாயப் பார்வை, கல்வியறிவு, போன்ற எண்ணங்கள் கொண்ட மக்கள் உருவாகும் போது, இது போன்ற கொடுமைகள் மறையும்,''

கேள்வி : வரதட்சிணைக் கொடுமையின் தீர்வு யார் கையில் உள்ளது?

பதில் : ''வரதட்சினை மட்டும் நம் நாட்டில் கொடுமை அல்ல; வேறு பல கொடுமை களும் நிலவி வருகின்றன, ஆனால் மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது இக் கொடுமைதான் எளிதில் நமக்குத் தெரிகிறது. இதற்குக் காரணம் பொருளாதார ஏற்றத் தாழ்வு தான். நம் நாடு பொருளாதாரத்தில் மேம்படும் பொழுது வர தட்சிணை வாங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றாது.

இதை எதிர்த்து அரசு பல சட்டங்கள் இயற்றியும், இளைஞர்களும் பல இயக்கங்களை உருவாக்கி அதன் மூலம் இக் கொடுமையை அகற்றலாம்.

# பெண்கள் முன்னேற்றம் குறித்து கவிஞர் அமுதபாரதியுடன் ஓர் அலசல்

கேள்வி : ஏன் சார்க் நாடுகள், பெண் குழந்தைகள் ஆண்டு என இவ்வாண்டை அறிவித்துள்ளன?

பதில் : எச் செயலிலும் ஆரம்பத்திற்கு முக்கியத்துவம், அளிக்க வேண்டும். குழந்தைப்பருவத்திலிருந்தே ஊக்கம் அளித்தால், அவர்கள், நம் நாட்டை மென் மேலும் உயர்த்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவார்கள்.

கேள்வி : சார்க் நாடுகள் அறிவித்துள்ளது போன்று மற்ற நாடுகள் ஏன் அறிவிக்க வில்லை?

பதில் : சார்க் நாடுகள் சம உரிமை வேண்டும் என்று போராடும் நாடுகளாகும். மற்ற வளர்ந்த நாடுகளில் ஆண்களிடம் தாங்கள் தான் பெரியவர், உரியவர் என்ற Egoism இருக்கு. ஒருவருக்கு ஒருவர் உரிமை கொடுத்து வாழ வேண்டும் என்ற எண்ணமுடைய நாடுகளாதலால், சார்க் நாடுகள் இவ்வாறு அறிவித்துள்ளன.

கேள்வி : பெண் விடுதலை தேவையா?

பதில் : பெண் விடுதலை தேவைதான். பெண் விடுதலை என்பது பாரதி சொன்னது போல் அமையனும், இன்னிக்கு அது பெண்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. விடுதலை என்பது பெண்ணைக் காப்பாற்றுவதற்காகத் தானே தவிர கெட்டப் பழக் கத்திற்கு அடிமையாவதற்காக அல்ல, Drug Addiction, தன்னை இழப்பது போன்ற தவறான வழியில் போவதற்காக அல்ல.

கேள்வி : ''தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமான மாக வாழ்வமிந்த நாட்டிலே'' என்றார் பாரதியார். அவர் கூறியபடி பெண்கள் நம் நாட்டில் நடத்தப்படுகின்றனரா?

பதில் : நம்மைப் போன்று பரந்த மனப்பான்மை உள்ளவர்களால் இவ்வாறு நடத்தப்படுகிறார்கள். நிறைய பெண்கள் பெரிய துறைகளிலே பணிபுரிகிறார்கள், உதாரணமா உங்கப் பள்ளியை நடத்தி வரும் **திருமதி. மாலதி பணிக்கர்,** அன்னை தெரேசா போன்றோரைச் சொல்லலாம்.

கேள்வி : ஔவையாரைப் போன்ற பெண் கவிஞர்கள் இக்காலத்தில் தோன்ற வில்லையே? ஏன்?

பதில் : இதற்கு ஆண் ஆதிக்கம்தான் காரணம். உதாரணமா, பாரதிதாசன் பெண்ணுரிமை போற்றிய கவிஞர், ஆனால் அவர் எழுதியது போலல்லாமல் தம் மனைவியான திருமதி. பழனியம்மா அவர்களைத் தன்னைக் காண வருபவர்க்கு வேண்டிய உணவுகளைத் தயாரிக்கச் சொல்வாரே தவிர, அவருடைய மனைவிக்கு அவரைக் காண வருபவர்களை அறிமுகம் செய்ய மாட்டார் என்ற உண்மை அண்மை யில் தான் தெரிய வந்தது. ஆகவே, மேடைகளில் பெண்ணுரிமை பற்றிப் பேசு பவர்களை அறிமுகம் செய்ய மாட்டார் என்ற உண்மை அண்மையில்தான் தெரிய வந்தது. ஆகவே, மேடைகளில் பெண்ணுரிமை பற்றிப் பேசுபவர்கள் வாழ்க்கையில் அதைக் கடைப்பிடிக்காதே இதற்குக் காரணம்.

''நிலாவின் பளபளப்பு,
நெருங்கி இறங்கிப் பார்த்தால,
சே! எத்தனைப் பள்ளங்கள்''

என்பதைப் போலத்தான்·

கேள்வி : வரதட்சணைக் கொடுமையின் தீர்வு ஆண்கள் கையில் உள்ளதா? அல்லது பெண்கள் கையில் உள்ளதா?

பதில் : அது இருவர் கையிலும் உள்ளது. எண்பது சதவிகிதம் ஆண்கள் கையிலும், இருபது சதவிகிதம் பெண்கள் கையிலும் உள்ளது.

கேள்வி : ஐந்தாம் வகுப்பு வரை பெண்களையே ஆசிரியர்களாகத் தமிழக அரசு நியமித்ததைப் பற்றி?

பதில் : இது மிகவும் சரியான ஒன்றாகும். ஆண்களைவிடப் பெண்களுக்குப் பொறுமையும், பாசமும் அதிகமாதலால் அவர்களால் குழந்தைகளை நல்ல முறையில் வழி நடத்திச் செல்ல முடியும்.

கேள்வி : மதுரை மாவட்டத்தில் பெண் குழந்தை பிறந்தவுடன் நெல்மணி அளித்துக் கொல்லப்படுவது பற்றி?

பதில் : கல்வியில்லாமையே இதற்குக் காரணம். பெண்-கல்வியின் தரத்தை மேம் படுத்தினால், இது போன்ற கொடுமைகள் குறையும்.

கேள்வி : ஒரு பெண் நடு இரவில் நகை அணிந்து தன்னத்தனியே வெளியே சென்று திரும்பும் போது தான் நம் நாட்டிற்குப் பூரண சுதந்திரம் கிடைத்ததாகும் என்று காந்தியடிகள் கூறிய சுதந்திரம் இப்பொழுது நம் நாட்டிற்குக் கிடைத்துள்ளதா?

பதில் : இச்சுதந்திரம் நம் நாட்டிற்கு இன்னும் கிடைக்கவில்லை. பட்டப்பகலிலேயே தனியே வெளியே சென்று திரும்புவது அரிதாய் இருக்கிறது.

# பத்மஸ்ரீ திருமதி. ஜெயா அருணாசலம் அவர்களுடன் பெண்ணுரிமை குறித்து மனம்கவர் பேட்டி

கேள்வி : வரதட்சிணைக் கொடுமையின் தீர்வு ஆண்கள் கையில் உள்ளதா? பெண்கள் கையில் உள்ளதா?

பதில் : இதற்குத் தீர்வு ஆண்கள் கையில் தான் உள்ளது. வரதட்சிணை என்பதன் பேரில் பெண்ணை ஒரு விலை போகும் பொருளாக, விளம்பரப் பொருளாக நடத்து கிறது நம் சமூகம். இதற்குத் தீர்வு காண, ஆண்கள் முன் வர வேண்டும்.

கேள்வி : பெண்களுக்கு, வேலை வாய்ப்புகளில், முப்பது சதவிகித ஒதுக்கீடு தந்தது சரியா?

பதில் : பொதுவாக, இதுபோன்று ஒதுக்கீடு என்று தரும் பொழுது, ஒதுக்கீடு ஐம்பது சதவிகிதம் ஆணுக்கு என்றும், ஐம்பது சதவிகிதம் பெண்ணுக்கு என்றும் கொடுக்க வேண்டும்.

கேள்வி : இதுபோல் கல்வியுலும் கொடுக்கலாமா?

பதில் : பள்ளியில் கட்டாயமான மற்றும் இலவசக் கல்வி பெண்களுக்கு அளித்தாலே போதுமானது, ஒதுக்கீடு கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

கேள்வி : பெண் விடுதலை பற்றி உங்கள் கருத்து?

பதில் : பெண் விடுதலை என்ற பேரில், ரோடுல சண்டை போடறதுல அர்த்த மில்லை. மனிதர்களிலேயே, ஆண் வேற, பெண் வேறன்னு நிலையை உருவாக்கி விட்டுட்டோம். ஆண் ஆதிக்கத்தின் அழிவே பெண் விடுதலையாகும்.

கேள்வி : ஒவ்வொரு பெண்ணின் தோல்விக்குப் பின்னும் ஒரு ஆண் இருக்கிறான் என்று கூறலாமா?

பதில் : ஒவ்வொரு பெண்ணின் தோல்விக்குப் பின் ஒரு ஆணே இருக்கிறான். இதைப் போக்க பெண்களுக்குள்ளே ஓர் எழுச்சி உருவாக வேண்டும். இன்னி வரைக்கும் பெண்கள், ஆண்கள் சொற்படிதான் நடந்து வருகிறார்கள், இது திருத்தப்பட வேண்டும்.

கேள்வி : சங்க காலத்தில் பெண்களைத் தெய்வமாக மதித்தார்கள், ஆனால் இப் பொழுது அவ்வாறு மதிப்புடன் பெண்கள் நடத்தப்படாதது பற்றி?

பதில் : என் கருத்து என்னவென்றால், பெண்களை தெய்வமாகவும் முன்னர் மதிக்கவும் வேண்டாம், பின்னர் அடிமையைப் போல் மிதிக்கவும் வேண்டாம். இக் காலத்தில் இது போன்ற மதிப்பு பெண்களுக்குத் தரப்படாததற்குக் காரணம் பெண் களின் இழி நிலையேயாகும்.

கேள்வி : சார்க் நாடுகள் இவ்வாண்டைப் ''பெண் குழந்தைகள் ஆண்டு'' என அறிவித்தது பற்றி?

பதில் : தெற்காசிய நாடுகளில், பெண்கள் பல கொடுமைகளுக்கு ஆளாகப் படுகிறார்கள். அவர்கள், இந்நாடுகளில் எல்லா விதங்களிலும் பின் தங்கியவர்களாக இருக்கிறார்கள், இதைக் கருதியே சார்க் நாடுகள் இவ்வாறு அறிவித்திருக்கின்றன.

கேள்வி : மதுரை மாவட்டத்தில், பல கிராமங்களில் பெண் குழந்தைகள் கொலை செய்யப்படுவதைப்பற்றி?

பதில் : 'ஐந்து பெண் பிறந்தால், அரசனும் ஆண்டியாவான்' என்பது பழமொழி. நம் நாட்டில் பிறந்ததிலிருந்தே ஆண்-பெண் என்ற பாகுபாடு உருவாக்கப்படுகிறது. இது போன்ற கொடுமைகளுக்கு ஆண் ஆதிக்கமே காரணமாகும், ஆண்களின் தூண்டுதலாலேயே பெண்கள் இவ்வாறு செய்ய முனைந்திருக்கிறார்கள்.

கேள்வி : இந்திரா காந்தி, அவர்கள் பிரதமரான பொழுது, பெண்களுக்காக அவர்கள் ஒன்றும் செய்ய வில்லை என்ற கருத்துப் பற்றி?

பதில் : இவ்வாறு நினைப்பது முற்றிலும் தவறானது. இந்திரா காந்தி அவர்கள் தான், "Minimum Wages for Women" என்பதை ஒழித்து "Equal pay for Equal Work" என்ற நிலையை நம் நாட்டில் உருவாக்கினார். நம் நாட்டில் இவ்வாறு சில தலைவர்களே அரிய முயற்சிகளுடன், அரிய செயல்களைச் செய்திருக்கிறார்கள்."

# எழுத்தாளர் அனுராதா ரமணன் அவர்களுடன் ஒரு சிறப்புப் பேட்டி

கேள்வி : பெண் விடுதலை பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில் : பெண் விடுதலை என்பது இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது என்று தான் கூற வேண்டும். ஒரு முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பிருந்த நிலையை விட இன்று நம் நாட்டில் பெண்கள் நிலையுயர்ந்து தான் உள்ளது. உதாரணமாக நானே இப்ப 'Lions Club'ல தலைவராயிருக்கேன். இதுவே பெண்களுக்கு நம்ம நாட்டில இப்ப எந்த அளவுக்கு வாய்ப்புகள், வசதிகள் இருக்கிறது என்பதை நமக்குக் காட்டுகிறது. ஆனாலும் பெண் விடுதலைன்னு சொல்லிக்கொண்டு சின்னசின்ன விஷயங்களுக்குக்கூட கணவனோடு சண்டைபோட்டு விவாகரத்துக்குப் போறது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கல; கவலை தரக்கூடிய விஷயம்.

கேள்வி : தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே என்பதைப் பற்றி....?

பதில் : அந்தச் சமத்துவம் முழுமையாக வரவில்லை என்று சொல்ல முடியாது. அந்தச் சமத்துவம் 'கல்வி'ல பெண்களுக்கு நிச்சயம் கிடைச்சிருக்கு; ஆனா மனவலிமை, தைரியத்துல அவங்க இன்னும் ஆணிற்கு நிகராக வரவில்லை. உதாரணமா சொல்லப்போனா டாக்டருக்கு, இஞ்சினியருக்குப் பல பெண்கள்

படிச்சுத் தேர்ச்சி பெறாங்க. இருந்தும் பெண்கள் டாக்டராதான் அதிகம் பணி புரியறாங்களே தவிர இஞ்சினியரிங் படிச்ச பெண்கள் அந்த மாதிரி துணிச்சலா செய்ய வேண்டிய வேலைக்குப் போகாம, தாங்க படிச்ச படிப்ப யாருக்கும் உபயோகம் இல்லாம வீணடிக்கிறார்கள் என்பது என்னுடைய கருத்து. எனக்கு வேதனை அளிக்கக் கூடிய உண்மையும் அதுதான்.

கேள்வி : வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு தந்த அரசு அறிக்கையைப் பற்றி....?

பதில் : இந்த அறிக்கை முற்றிலும் சரிதான். ஆனா வேலைக்குச் செல்லும் ஒவ்வோர் பெண்ணும் இந்த வேலையால் வரும் சம்பளம் நமக்கு Lipstick, Powderருக்குப் பயன்படப் போறதா அல்லது அதே தகுதியுள்ள ஒரு ஆணிற்குத் தந்தா அவ வீட்டுல அடுப்பு எரியுமா? என்பதை சிந்திச்சு வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பணம் நல்ல முறையில் அத்தியாவசியத் தேவைக்குதான் பயன் படப் போகிறது என்று முடிவு செய்து பெண்கள் வேலைகளை ஏற்க வேண்டும். மேலும் இப்போ தமிழக அரசு மாநகராட்சி தேர்தலில் பெண்களுக்கு என்று சில சதவிகித இடத்தை ஒதுக்கியிருப்பது போன்றவை பெண்களுக்குத் தேவையான இந்த மனோதைரியத்தை அளிக்கும் என நினைக்கிறேன்.

கேள்வி : ஐந்தாம் வகுப்புவரை பெண் ஆசிரியர்களையே நியமிக்க வேண்டும் என்ற கருத்து பற்றி?

பதில் : இது நிச்சயம் தேவை; இன்னும் சொல்லப்போனா எட்டாம் ஒன்பதாம் வகுப்புவரை கூடப் பெண்களே பள்ளி ஆசிரியைகளா நியமிக்கப்பட வேண்டும். இதற்குக் காரணம் பெண்களால்தான் குழந்தைளிடம் அன்பு செலுத்தி அவங்கள கனிச்சு நடத்த முடியும்.

கேள்வி : வரதட்சணைக் கொடுமையின் தீர்வு ஆண்கள் கையில் உள்ளதா? அல்லது பெண்கள் கையில் உள்ளதா?

பதில் : இது நிச்சயமா பெண்கள் கையில்தான் இருக்கு. ஒவ்வொரு மகனப் பெத்த தாயும் தன் மகனுக்கு வரதட்சணை இல்லாம கல்யாணம் பண்ணனும்னு முடிவு என்று எடுக்கறாங்களோ அன்றைக்குத்தான் இப்பிரச்சனைக்கு ஒரு முடிவு கிடைக்கும். இப்ப இன்னும் ஒரு பிரச்னை; வரதட்சணை வேண்டாம்னு சொல்ற மணமகனை அவனுக்குக் குறையுள்ளதா சந்தேகப்படறது நம் சமுதாயம். இதுவும் மாறுகிறது. மாற வேண்டும்.

கேள்வி : ''ஒரு அழகான பெண் நள்ளிரவில் நிறைய நகைகளுடன் என்றைக்கு பயமின்றி வெளியில் சென்று வீடு திரும்புகிறாளோ அன்றுதான் நம் நாட்டிற்கு முழு சுதந்திரம் கிடைக்கும்'' என்று காந்தியடிகள் கூறியது பற்றி...?

பதில் : அந்தச் சுதந்திரம் நிச்சயமா நமக்கு இன்னும் கிடைக்கவில்லை; கிடைக்கும். பாதையில் ஒரு அடி எடுத்து வைத்தாலும் அரசியல், வன்முறைகள் இரண்டடி அதைக் கீழே தள்ளிவிட்டு விடுகிறது.

கேள்வி : பெண்களை என்னதான் உயர்த்திக் கூறினாலும் நடைமுறை வாழ்வில் அவர்களுக்கு உரிமைகள் மறுக்கப்படும் அவலநிலைக்குக் காரணமென்ன?

பதில் : இது எல்லாவற்றிற்கும் அடிப்படைக்காரணம் பெண்களைப் போகப்பொரு ளாக நினைக்கும் எண்ணம். விளம்பரங்கள் போன்றவற்றில் பெண்களை ஆபாச மாகப் பயன்படுத்தும் போக்கு இன்றில்லை, Viceroy காலத்திலிருந்தே இருந்து கொண்டிருக்கிறது. இவை மாறினால்தான் பெண்களின் இந்த அவல 'நிலைக்கு மாறுதல் கிடைக்கும்.

கேள்வி : பாரதியார் 'எங்கள் தந்தையர் நாடு எனும் பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது' என்று பாடுகிறார். தாய்நாடு, தாய்மொழி எனப் போற்றிய பாரதி ஏன் இவ்வாறு மாறுபட வேண்டும்?

பதில் : ஒரு தந்தையில்லாம தாய் உருவாக முடியாது; அவர்களுக்கும் ஒரு வாய்ப்புக் கொடுக்கலாமே என்பதால் தான் அவ்வாறு பாடியுள்ளார்.

கேள்வி : பல பெண்களுக்கு எழுதும் திறன் இருந்தாலும், அவர்களால் திருமணத் திற்குப்பிறகு தங்கள் பணியைத் தொடர முடியவில்லை. இதன் காரணமென்ன?

பதில் : ஒரு ஆணிற்கோ பெண்ணிற்கோ ஒரு பணியைத் தொடரவேண்டுமானால் சரியான இணை வேண்டும். இணை சரியாக அமையவில்லையென்றால் அவர் களால் தங்கள் பணியைத் தொடரமுடியாது. ஒரு ஆணாக இருந்தால் அவன் ஒரு அறையில் உட்கார்ந்து 'நான் எழுதிக்கொண்டிருக்கிறேன். வேளாவேளைக்கு எனக்குச் சாப்பாடு வரணும், யாரும் என்னைத் தொந்தரவு செய்யக்கூடாது' என்று அதிகாரம் செய்ய முடியும். ஆனால் ஒரு பெண்ணால் அது முடியாது. இது போன்ற பல காரணங்களை நாம் இதற்காகக் கூறலாம்.

கேள்வி : கடைசியாக, பெண் விடுதலை பற்றி நீங்க எழுதிய ஏதாவது சில நூல்களைக் கூற முடியுமா?

பதில் : பெண் விடுதலைப்பற்றி நான் பல கதைகள் எழுதியிருந்தாலும், நான் குறிப்பிட்டுக் கூற விரும்புவது 'மிதிலை நகரத்துச் சீதைகள்', 'கூட்டுப்புழுக்கள்', 'சிறை' போன்றவைகள்.

